இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 67 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – புரட்டாசி 31 – வெள்ளிக்கிழமை 17 அக்டோபர் 2025 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 67 : Thiruvalluvar Year - 2056 - Purataasi 31 - Friday 17 October 2025 - Chennai 16 Pages ₹ 5.00

## தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு!

# ஆளுநர் ரவியின் கருத்துக்களை பேரவை நிராகரிக்கிறது!

## சட்டப் பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தீர்மானம்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.10.2025) சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழக சட்ட முன்வடிவு குறித்த தீர்மானத்தை முன்மொழிந்து பேசினார்.

**சென்னை, அக்.17-**

**"தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு குறித்து ஆளுநர் ரவி தெரிவித்துள்ள கருத்துக்களை பேரவை நிராகரிக்கிறது" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று சட்டப் பேரவையில் இதுகுறித்த தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றும்போது கூறினார்.**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்ய அனுமதி கோரப்பட்ட நிலையில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

பேரவைத் தலைவர் அவர்களே, 2025ஆம் ஆண்டு தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு தாங்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை அழைத்துள்ளீர்கள். அவரும் தற்போது இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்துள்ளார்.

இச்சட்டமுன்வடிவு சம்பந்தமான ஒரு செய்தியை பேரவையின் முன் வைக்க விரும்புகிறேன். தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடி வானது, நிதிச் சட்டமுன்வடிவு என்கிற வகைப்பாட்டில் வருகின்ற காரணத்தால் இச்சட்டமுன்வடிவினைப் பேரவையில் ஆய்வு செய்வதற்கு அரசமைப்புச் சட்டம், கூறு 207(3)ன்கீழ் ஆளுநர் அவர்களின் பரிந்துரை பெறப்பட வேண்டும்.

### நடைமுறைகளை பின்பற்றாத ஆளுநர்!

பொதுமக்களின் கருத்தை அறிந்து, வரப்பெற்ற கோரிக்கைகளைக் கவனத்தில்கொண்டு, மக்களாட்சியின் ஒரு தூணாகக் கருதப்படும் நிருவாகத்தால், மக்கள் நல்வாழ்வுத் துறையால் வரைவு சட்டமுன்வடிவு தயாரிக்கப்பட்டு, சட்டத் துறையால் சரிபார்க்கப்பட்டு, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் பல கட்டங்களில் பரிசீலிக்கப்பட்டு, மேற்காணும் சட்டமுன்வடிவின் அச்சடிக்கப்பட்ட பிரதி ஆளுநருக்கு இணைத்து அனுப்பப்பட்டது.

ஆனால், ஆளுநர் அவர்கள் அரசமைப்புச்சட்டத்தின்படிபின்பற்றப்பட்டு வந்த வழக்கமான நடைமுறையைப் பின்பற்றாமல், இச்சட்டமுன்வடிவில் உள்ள சில பிரிவுகள் குறித்து தன்னுடைய கருத்தைத் தெரிவித்து, அந்தக் கருத்துகள் இச்சட்டமுன்வடிவு பேரவையில் அறிமுகப்படுத்தப்படுகையில் பேரவை உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்று தன்னுடைய செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### விதிகளுக்கு முரணான ஆளுநரின் கருத்து!

இது அரசியல் சட்டத்திற்கும், நமது சட்டப் பேரவை விதிமுறைகளுக்கும் முரணானது. ஒரு சட்டமுன்வடிவு பேரவையில் விவாதிக்கப்படுகையில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரவை உறுப்பினர்களுக்கு மட்டுமே அதில் திருத்தங்களை முன்மொழியவும், அதற்கான விளக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டால் திருத்தங்களைத் திரும்பப் பெறவும், இல்லையெனில், வாக்கெடுப்பைக் கோரவும் அதிகாரம் உள்ளது.

இத்தகைய சட்டமுன்வடிவு பேரவையால் நிறைவேற்றப்படுவதற்கு முன்பு அதன்மீது கருத்துகளைத் தெரிவிக்கும் அதிகாரம் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே, ஆளுநர் அவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ள செய்தியில் இடம் பெற்றுள்ள கருத்துகளை இந்த மாமன்றம் ஏற்றுக்கொள்ள இயலாது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், "Consideration" என்று சொல்ல வேண்டிய ஆளுநர், அரசமைப்புச் சட்டத்திற்குப் புறம்பாக "Appropriate Consideration" என்று குறிப்பிட்டுள்ளார். இதில், "Appropriate" எனும் வார்த்தைக்கு என்ன பொருள்? "பொருத்தமான" அல்லது "தகுந்த" முறையில் ஆய்வு செய்ய வேண்டும்" என்று பொருள்.

### பேரவையின் மாண்பை குறைக்கக் கூடியது!

இப்பேரவை சட்டமுன்வடிவுகளை "பொருத்தமற்ற முறையில்" அல்லது "தகுந்த முறையில் அல்லாமல்" ஆய்வு செய்யும் தொனியில், "பொருத்தமான" அல்லது "தகுந்த" எனும் பொருள்படக் கூடிய வார்த்தையை சேர்த்திருப்பது, இந்தப் பேரவையின் மாண்பைகுறைக்கக்கூடிய கருத்து என்பதால், அது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டம் இயற்றுவது, இப்பேரவைக்கு மட்டுமே உள்ள அதிகாரம். ஆகவே, ஆளுநர் அவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ள அந்தக் கருத்துகள் அடங்கிய செய்தி அவைக் குறிப்பில் இடம் பெறுவதை மாநில சுயாட்சியில் நம்பிக்கை கொண்ட எந்த ஓர் உறுப்பினரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற காரணத்தால், அந்தக் கருத்துகளை நான் இங்கே பதிவுசெய்ய விரும்பவில்லை.

### பேரவை நிராகரிக்கும்!

எனவே,

**"2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவை பேரவையில் ஆய்வு செய்வதற்கு ஆளுநர் அவர்கள் அனுப்பியுள்ள செய்தியில் (Message) இருக்கக் கூடிய அவரின் கருத்துகள் மற்றும் பேரவையின் மாண்பைக் குறைக்கக் கூடிய அந்த வார்த்தை அடங்கிய பகுதிகளை இப்பேரவை நிராகரிக்கிறது"** (மேசையைத் தட்டும் ஒலி)

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன். உறுப்பினர்கள் அனைவரும் இதனை ஒருமனதாக நிறைவேற்றித் தரவேண்டும் என்றும் கேட்டு அமைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பேரவையில் உரையாற்றினார்.

# கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு 20% தீபாவளி போனஸ்!

## தமிழ்நாடு அரசு ஆணை!

*சென்னை, அக்.17-*

*தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 2024-2025 ஆண்டுக்கான மிகை ஊதியம் (போனஸ்) மற்றும் கருணைத் தொகை (Exgratia) 2025-2026இல் வழங்க தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.*

*போனஸ் சட்டத்தின் கீழ் வரும் கூட்டுறவு சங்கங்களில் ஒதுக்கப்படக்கூடிய உபரித் தொகையை கணக்கில் கொண்டு அச்சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 20 விழுக்காடு வரை மிகை ஊதியம் (போனஸ்) வழங்கப்படும். உபரி தொகை இல்லாமல் உள்ள சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்கள் தீபாவளி பண்டிகையினை சிறப்பாக கொண்டாடுவதற்கு ஏதுவாக 10 விழுக்காடு மிகை ஊதியம் (போனஸ்) மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும்.*

*குறைந்த எண்ணிக்கையிலான பணியாளர்கள் பணிபுரிந்து போனஸ் சட்டத்தின் கீழ் வராத நிகர இலாபம் ஈட்டும் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 20 விழுக்காடு வரை மிகை ஊதியம் (போனஸ்) மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும்.*

*போனஸ் சட்டத்தின் கீழ் வராத நிகர இலாபம் ஈட்டாத தலைமைச் சங்கங்கள் மற்றும் மத்திய சங்கங்களாக இருப்பின் அவற்றில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ரூ.3000/ம், தொடக்க சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ரூ.2,400/ம் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கருணைத் தொகையாக வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.*

*இதன்படி, தமிழ்நாடு முழுவதும் உள்ள கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும்* **44,081** *பணியாளர்களுக்கு* **ரூ. 44 கோடியே 11 இலட்சம்** *மிகை ஊதியம் (போனஸ்) மற்றும் கருணைத் தொகை வழங்கப்படவுள்ளது.*

*அரசின் இந்த நடவடிக்கை கூட்டுறவு நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்கள் மிகவும் ஆர்வத்துடனும், ஈடுபாட்டுடனும், ஊக்கத்துடனும் பணியாற்றுவதையும் எதிர்வரும் தீபாவளி பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதையும் உறுதிசெய்திட வழிவகை செய்யும்.*

## புதிய பல்கலைக்கழக மசோதாக்களுக்கு ஒப்புதல்தர மறுக்கும்

# தமிழ்நாடு ஆளுநருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு!

## உச்சநீதிமன்றத்தில் இன்று விசாரணை!

**புதுடெல்லி, அக்.17-**

**தமிழ்நாடு அரசு புதிய பல்கலைக்கழகங்களை உருவாக்கி உள்ள நிலையில், அதற்கு ஒப்புதல் வழங்காத மாநில ஆளுநர் ஆர்.ரவிக்கு எதிராக தமிழ்நாடு அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது இன்று விசாரணைக்கு வருகிறது.**

தமிழ்நாடு அரசின் பல்கலைக்கழக வேந்தர் உள்பட பல்வேறு மசோதாக்களுக்கு ஆளுநர் அனுமதி வழங்க மறுத்த நிலையில், உச்சநீதிமன்றம் அந்த மசோதாக்களுக்கு அனுமதி வழங்கியது. இது விவாதங்களை ஏற்படுத்தியது. இதையடுத்து, குடியரசு தலைவர் இது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் பல்வேறு கேள்விகளை எழுப்பி, விளக்கம் கோரியிருக்கிறார். இந்த வழக்கு உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு விசாரணை முடிவடைந்து, தீர்ப்புக்காக காத்துக்கொண்டிருக்கிறது.

இந்த நிலையில், தமிழ்நாடு அரசு சட்டமன்றத்தில் நிறைவேற்றிய புதிய பல்கலைக் கழக மசோதாக்களுக்கு ஆளுநர் ஆர்.என். ரவி இதுவரை, அனுமதி வழங்காமல் இருப்பதுடன், அந்த மசோதாக்களை குடியரசுத் தலைவர் பார்வைக்கு அனுப்பி உள்ளார்.

முன்னதாக, தமிழ்நாடு அரசு, விளையாட்டு பல்கலைக்கழக குழுவில் நிதித்துறை செயலாளர் நியமிப்பது மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்திலும் மாற்றுத்திறனாளிகள் உறுப்பினராக இருப்பதற்கான தகுதியின்மையை நீக்க முடிவு செய்யும் வகையில், தமிழ்நாடு சட்டப்பேரவையில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம் சட்ட திருத்த மசோதா 2025 கடந்த ஏப்ரல் மாதம் 29ஆம் தேதி நிறைவேற்றி இருந்தது.

அதுபோல, மறைந்த முன்னாள் முதல்வர், எம்.கருணாநிதியின் பெயரிடப்பட்ட கலைஞர் பல்கலைக்கழகம் கும்பகோணத்தில் நிறுவப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்தது. பெரும்பாலான மாநில நிதியுதவி பெறும் பல்கலைக்கழகங்களைப் போலவே, வேந்தரே ஆளுநர் அல்ல, முதலமைச்சரே இருப்பார் என்றும் தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

இந்தப் புதிய பல்கலைக்கழகம் 2025-2026 கல்வியாண்டில் செயல்படத் தொடங்கும், மேலும் வளமான காவிரி டெல்டா பகுதியில் உள்ள அரியலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களை உள்ளடக்கும். திருச்சிராப்பள்ளியை தளமாகக் கொண்ட பாரதிதாசன் பல்கலைக் கழகத்தைப் பிரித்து இந்தப் பல்கலைக்கழகம் நிறுவப்படும், இது தற்போது எட்டு மாவட்டங்களை உள்ளடக்கியது.

மசோதா நிறைவேற்றப்பட்டவுடன், இரண்டுபல்கலைக்கழகங்களும்தலாநான்கு மாவட்டங்களை உள்ளடக்கும். முன்னாள் முதல்வர் கருணாநிதி பிறந்த தஞ்சாவூர் மாவட்டத்தின் ஒரு பகுதியாக கும்பகோணம் இருப்பதால், அதன் பெயரிடப்பட்ட பல்கலைக் கழகத்திற்கு கும்பகோணம் தேர்வு செய்யப்பட்டது.

அரசு நிதியுதவி பெறும் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரங்களை ஆளுநரிடமிருந்து அரசுக்கு மாற்றிய உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்குப் பிறகு, தி.மு.க. அரசால் நிறுவப்படும் முதல் பல்கலைக்கழகம் இதுவாகும். அரசு நிதியுதவி பெறும் பல்கலைக்கழகங்களின் செயல்பாட்டில் அரசாங்கத்திற்கு இப்போது அதிக அதிகாரங்கள் இருந்தாலும், ஆளுநர் தொடர்ந்து வேந்தராக இருக்கிறார். இருப்பினும், புதிய பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரை, ஆளுநருக்கு எந்தப் பங்கும் இருக்காது, அனைத்து கட்டுப்பாடும் முதலமைச்சர் மற்றும் அரசாங்கத்திடம் இருக்கும்.

தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் ஆளுநர் கூட்டிய கூட்டத்திலிருந்து விலகிய சிறிது நேரத்திலேயே இந்த நிகழ்வு ஏற்பட்டுள்ளது.

இந்த சட்ட மசோதாவிற்கு ஒப்புதல் வழங்க கோரி கோப்புகளை தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு அரசு அனுப்பி வைத்திருந்தது ஆனால் இந்த மசோதாக்களை ஆளுநர் இதுவரை அனுமதி வழங்காமல், குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்க முடிவு எடுத்துள்ளதாக கூறப்படுகிறது. இதற்கு எதிராக தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது.

தமிழ்நாடு ஆளுநரின் இந்த முடிவு அரசியல் சாசனத்தின் பிரிவு 200 மீறும் வகையில் இருக்கிறது என்றும் எனவே ஆளுநரின் நடவடிக்கைகளை சட்டவிரோதம் என அறிவிப்பதுடன் தன்னிச்சையானது எனவும் அறிவிக்க வேண்டும் என மனுவில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது

மேலும் அரசு அனுப்பி வைக்கும் மசோதாக்களை ஆளுநர் கையாளும் விதம் அரசியல் சாசனத்திற்கு எதிராக இருக்கிறது எனவும்தமிழகஅரசுமனுவில்குற்றச்சாட்டுகளை முன் வைத்துள்ளது. இந்த இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.